இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 218 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 05 – புதன்கிழமை 19 மார்ச் 2025 – மதுரை 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 218 : Thiruvalluvar Year - 2056 - Panguni 05 - Wednesday 19 March 2025 - Madurai 12 Pages ₹ 5.00

## தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதம் நடத்த அனுமதி மறுப்பு!

# நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் இருந்தும் தி.மு.க. வெளிநடப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் எல்.கே.எம். சுரேஷ், செயலாளர் இரா. வேலுச்சாமி, பொருளாளர் கே. பாலசுப்பிரமணியம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025–26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், விசைத்தறி துறையில் நாளுக்குநாள் மாறிவரும் தொழில்நுட்ப தேவைகளை நிறைவு செய்திட விசைத்தறி நவீனப்படுத்தும் திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்றும், விலையில்லா வேட்டி சேலை உற்பத்தி திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் 673 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்து, விசைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெறுவதற்கும், வாழ்வாதாரம் உயர்வதற்கும் வழிவகை செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் சு.முத்துசாமி, ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி ஆகியோர் உள்ளனர்.

**புதுடெல்லி, மார்ச் 19 -**

**தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதால், மக்களவை மற்றும் மாநிலங்களவையில் இருந்து தி.மு.க. இரண்டாவது நாளாக வெளிநடப்பு செய்தது.**

### மக்களவை

மக்கள் தொகை அடிப்படையில், மக்களவை தொகுதி மறுசீரமைப்பு குறித்து, அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விட்டு விவாதம் நடத்த வேண்டும் என்று கோரி, தி.மு.க நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுத்திருந்தார்.

ஆனால், இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால், மக்களவையில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தை அவையில் விவாதிக்க அனுமதிக்காமல், ஒன்றிய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

### மாநிலங்களவை

இதேபோன்று, தொகுதி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மோசடி உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து மாநிலங்களவையில் விவாதிக்க வேண்டும் என தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தின. எனினும், தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து, விவாதம் நடத்த மாநிலங்களவையில் அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து, தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் மாநிலங்களவையில் இருந்தும் வெளிநடப்பு செய்தன.

### திருச்சி சிவா பேட்டி!

இதுகுறித்து பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்த கழக மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா, உரிய முறையில் நோட்டீஸ் கொடுத்தும் தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து வெளிநடப்பு செய்துள்ளோம். எங்களுடன் தோழமைக் கட்சியான காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்டு வெளிநடப்பு செய்துள்ளார்கள் என்றார்.

ஏற்கனவே நேற்றைய தினம் (திங்கள்) தி.மு.க., காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் இதே கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் இருந்தும் வெளிநடப்பு செய்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### மார்ச் 5-ல் அனைத்துக் கட்சிக் கூட்டம்!

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான ஒன்றிய அரசின் நடவடிக்கையால், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில், அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த மார்ச் 5ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி விரிவாக விவாதித்தார்.

அப்போது தொகுதி மறுசீரமைப்பை 30 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானதாக இல்லை என்றும், அதேசமயம் கடந்த 50 ஆண்டுகளாக சமூகப் பொருளாதார நலத்திட்டங்களை சிறப்புற செயல்படுத்தியதற்கு ஆன தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது எனவும் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவிகிதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசு மாற்றக்கூடாது என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

### கூட்டு நடவடிக்கைக் குழு!

இந்தக் கோரிக்கைகளையும் அவை சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் மக்கள் மத்தியில் இந்தப் பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ‘கூட்டு நடவடிக்கைக் குழு’ ஒன்றை அமைத்திட வேண்டும்” எனவும் முடிவு செய்யப்பட்டது.

### மார்ச் 22-ல் சென்னையில் கூட்டம்!

இதையடுத்து தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் பற்றி கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது குறித்து பாதிப்பிற்குள்ளாகும் என கருதப்படும் 7 மாநில முதல்வர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அதில் வருகிற மார்ச் 22ஆம் தேதி சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ், ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக், கேரள முதல்வர் பினராயி விஜயன், கர்நாடக முதல்வர் சித்தராமையா, கர்நாடகா துணை முதல்வர் சிவகுமார், பஞ்சாப் முதல்வர் பகவத்மான், ஆந்திரப்பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநில முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இக்கடிதம் மேற்குறிப்பிட்ட 7 மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு முக்கியக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

---

## மடிக்கணினியை அ.தி.மு.க. அரசால் வழங்க முடியாமல் நிறுத்திவிட்டனர்!

# மாணவர்களுக்கு கைக்கணினி - மடிக்கணினி வழங்க அறிவித்திருக்கிறோம்!

### பேரவையில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, மார்ச் 19-**

**பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி.முனுசாமி நேற்று முன்தினம் பேசியபோது குறுக்கிட்டு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நாங்கள் மடிக்கணினி கொடுத்து இருக்கிறோம். ஆனால் நீங்கள் அதனை நிறுத்திவிட்டீர்கள் என்று பேசினார்.**

அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசியதாவது:-

நாங்கள் நிறுத்தவில்லை. நீங்களே நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டீர்கள். கேட்டுக்கொள்ளுங்கள். கொரோனா என்பது ஒரு கட்டம்; அதை இல்லையென்று நான் மறுக்கவில்லை.

அதேநேரத்தில் supply செய்ய வேண்டியவர்களால் முறையாக supply செய்ய முடியவில்லை; அந்த quantity-ஐ கொடுக்க முடியவில்லை. அதனால், நீங்களே அதைக் கொடுக்க முடியவில்லை. நீங்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காக அதை நாங்கள் நிறுத்தவில்லை. அதற்குப் பிறகு தான் இதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சிந்தித்து, அத்திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும் என்று தற்போது அறிவித்திருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசினார்.

---

## 100 நாள் வேலைத் திட்டத்தை

# ஒன்றிய அரசு திட்டமிட்டு முடக்குகிறது!

### மாநிலங்களவையில் சோனியா காந்தி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, மார்ச் 19 -*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க., அரசு திட்டமிட்டு முடக்கி வருவதாக காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி குற்றம்சாட்டி யுள்ளார்.*



*மாநிலங்களவையில் பேசிய சோனியாகாந்தி, முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை தற்போதைய பா.ஜ.க., அரசு வேண்டுமென்றே முடக்கி வருவதாக குற்றம்சாட்டினார்.*

*இத்திட்டத்துக்கு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் என்றும், புதிய விதிமுறைகளை தளர்த்த வேண்டும் என்றும் சோனியா காந்தி வலியுறுத்தினார். 100 நாள் வேலை திட்டத்திற்கான ஊதியத்தை 400 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்றும், வேலை நாட்களை 150 நாட்களாக உயர்த்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். மேலும், இத்திட்டத்துக்கான நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் சோனியாகாந்தி வலியுறுத்தினார்.*

---

# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, மார்ச் 19 -*

*தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டல கீழடுக்கு சுழற்சி பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதனால் தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இன்று முதல் மார்ச் 24 வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*இன்று முதல் 22ம் தேதி வரை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஒரிரு இடங்களில் இயல்பை விட 23° செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். சென்னையை பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 35° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும். நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.*

*அதிகபட்ச வெப்பநிலை 34 35° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

## ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’

# அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது!

### நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் நீதியரசர் ஏ.பி.ஷா கருத்து!

*புதுடெல்லி, மார்ச் 19 -*

*‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டம் கூட்டாட்சி மற்றும் அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது என்று, டெல்லி உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் தெரிவித்துள்ளார்.*

*ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா கலந்து கொண்டு தனது கருத்துகளை முன்வைத்தார்.*

*அப்போது பேசிய அவர், ஒரே தேர்தல் நடத்த கொண்டு வந்துள்ள மசோதாக்கள் சட்ட சிக்கல்கள் கொண்டதாக உள்ளதெனத் தெரிவித்தார். மாநில சட்ட பேரவைகளின் தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்ற அதிகாரத்தை தேர்தல் ஆணைத்துக்கு வழங்கி இருப்பது சரியானது அல்ல என்றும் கூறினார். இந்த மசோதாக்கள் அரசியல் சாசனத்தின் அடிப்படை மற்றும் கூட்டாட்சி தத்துவங்களுக்கு எதிரானது என்றும் கூறினார்.*

*ஒரே தேர்தல் மூலம் செலவு குறையும் என்ற வாதத்துக்கும் நீதிபதி ஷா எதிர்ப்பு தெரிவித்தார். இதேபோல், இந்த கூட்டத்துக்கு ஒரே நாடு ஒரே தேர்தல் பரிந்துரை குழுவில் இடம் பெற்றிருந்த முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் ஹரிஷ் சால்வேயும் அழைக்கப்பட்டிருந்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவரிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.*

*முன்னதாக ஒரேநாடு, ஒரே தேர்தல் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனநாயக சீர்திருத்த அமைப்பு நாடாளுமன்ற கூட்டுக்குழுவிடம் அறிக்கை அளித்தது. இத்திட்டம் குதிரை பேரத்துக்கு வழிவகுக்கும் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*